செய்தி வெளியீடு எண்: 101/2022 நாள்: 17.11.2022

## பத்திரிக்கை செய்தி

## சுரங்கம் தோண்டும் இயந்திரத்தை பயன்படுத்தும் போது முறையாக கண்காணிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் த.அர்ச்சுனன் தகவல்

சென்னை மெட்ரோ இரயில் பணிக்காக சுரங்கப்பாதை அமைக்கும் போது சுரங்கம் தோண்டும் இயந்திரம் பயன்படுத்தும் போது அப்பகுதியின் மேற்பரப்பு பகுதியில் ஏற்படும் நில அதிர்வுகள் மற்றும் அப்பகுதியில் உள்ள கட்டிடங்களில் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுகிறதா என்பதை கண்காணிக்க பிரத்யேக கருவிகள் மூலம் கண்காணிக்க பட்டு வருவதாகவும் அதில் ஏதேனும் பாதிப்புகள் இருப்பின் அவற்றை சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் சரி செய்து தருவதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் த.அர்ச்சுனன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுரங்க வழித்தடத்தின் மேற்பகுதியில் தரை அதிர்வைக் கண்காணிக்கும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. சுரங்க வழித்தடப் போக்கில் உள்ள கட்டடங்களில் கட்டுமானங்களைக் கண்காணிக்கவும் அதற்கான கருவிகள் பொறுத்தட்டுள்ளன. சுரங்கம் தோண்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தி சுரங்கம் தோண்டும் அதிர்வு மற்றும் கட்டுமான பாதிப்புகளை கண்டறியும் கருவிகளின் பதிவுகள் செய்யப்படும். சுரங்கம் தோண்டும்போது, மேற்பகுதியில் மாற்றங்கள் ஏற்படாவண்ணம் மேற்பரப்பு கண்காணிக்கும் குழு உறுதி செய்து வருகிறது. கட்டுமானங்கள் மற்றும் மேற்பூச்சு வெடிப்புகளுக்கான கட்டட ஆய்வுகள் பதிவு செய்யப்பட்டு குடியிருப்போரின் ஒப்புதல் பெறப்படுகின்றன. சுரங்கம் தோண்டும் இயந்திரம் அப்பகுதியைக் கடந்தவுடன் கட்டடங்களில் வெடிப்புகள் அதிகமானால் முழுமையாக பழுதுபார்க்கப்படும்.

இதுதவிர, சுரங்கம் தோண்டும் போது அப்பகுதியில் உள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்த வெளி கிணறுகள் தாற்காலிகமாவோ அல்லது நிரந்தரமாகவோ மூடப்படும். நிரந்தரமாக மூடப்பட்ட ஆழ்துளை கிணறுகளுக்கு

பதிலாக புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்துத் தர வழிவகை செய்யப்படும். திறந்தவெளி கிணறுகள் மூடப்பட்டால் அவற்றிக்குப் பதிலாக ஆழ்துளை கிணறுகள் அமைத்துத் தரப்படும். சுரங்கம் தோண்டும் இயந்திரம் கடந்து செல்லும் வரையில் ஆழ்துளை கிணறுகள் இருப்பின் தற்காலிகமாக அடைக்கப்படும். அந்த நேரத்தில் குடியிருப்போருக்குத் தேவையான தண்ணீர் செய்யப்படும்.

தங்குவதற்கு பாதுகாப்பில்லை என பட்டியலிடப்பட்ட கட்டடங்களில் குடியிருப்பவர்களை சுரங்கம் தோண்டும் பணிகளின் பொது இரண்டு மாதங்களுக்கு மாற்று தாங்கும் வசதி செய்வது உறுதி செய்யப்படும். மிகவும் பழமையான கட்டடம், சுரங்கம் தோண்டிய பின்னரும் பாதுகாப்பில்லை என உறுதி செய்யப்பட்டால் புதிய கட்டுமானம் குறித்து பரிசீலனை செய்யப்படும்.

எனவே, சுரங்கப்பாதை அமைக்கும் போது சுரங்கம் தோண்டும் இயந்திரம் பயன்படுத்தும் போது பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை. இவ்வாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**